# திருவல்லிக்கேணி



திருவல்லிக்கேணி என்னும் தலம் வந்தேன்,

திருமாலே உன் அருள் வேண்டி வலம் வந்தேன் !

திருவல்லிக்கேணி.......

பாண்டவர்க்கு துணையாக அன்றிருந்தாய்,

பார் புகழ்ந்திடும் கீதையை எமக்குத்தந்தாய் ;

பாஞ்சஜன்யம் தனைக் கையில் கொண்டே,

பார்த்தசாரதியாக இத்தலத்தில் நிற்கின்றாய் !

திருவல்லிக்கேணி.......

வேதங்கள் எல்லாம் புகழ்ந்திடும் நாயகனே,

பேதம் பாராது அனைவர்க்கும் அருள்பவனே ;

வேதவல்லியுடன் இங்கு உறைகின்றவனே ,

வேதனையை உன்னிடம் கூறிட வந்தேன்.

திருவல்லிக்கேணி.........